**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 25/2017**

**Deposition of Witnesses for PW-4**

| | | |
|---|---|---|
| **Name** | : | திரு.ஜெயகாந்தன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 23.01.2026

**1,2 எதிரிகள் ஆஜர் 3எதிரி PT Warrent மூலம் ஆஜர்படுத்தபட்டார். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

முதல் விசாரணை

நான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம் பிரப்பன் வலசை குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன்.கடந்த 25.04.2013 அன்று ராமேஸ்வரம் குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தபோது காலை சுமார் 6.00மணியளவில் Qபிரிவு காவல் ஆய்வாளம் திரு.கென்னடி அவர்கள் என்னை தொடர்பு கொண்டு தனுஷ்கோடி பாறையடி பகுதியில் இலங்கைக்கு கடத்துவதற்காக போதைப்பொருட்களுடன் சிலர் இருப்பதாக தகவல் கிடைத்ததாக என்னிடம் கூறி என்னை அழைத்தார்.நானும் எனது கிராம உதவியாளர் திரு.முனியசாமி அவர்களும் Qபிரிவு போலீசாருடன் தனுஷ்கோடி பாறையடி பகுதிக்கு சென்று கண்காணிக்கும்போது அப்பகுதியில் இருந்த 3 பேர் எங்களை கண்டதும் ஓடினார்கள் அப்போது காவல்துறையினர் அவர்களை விரட்டி சென்று போது ஒருவரை மட்டும் பிடித்தார்கள் மற்ற இருவர் ஓடிவிட்டார்கள்.அவரை பிடித்து காவல் ஆய்வாளர் விசாரணை செய்த போது அவர் பெயர் ஜான்சன் என்றும் தப்பிசென்றவர்கள் டென்னி மற்றும் செல்வகுமார் என்று சொன்னார்.பின்னர் காவல் ஆய்வாளர் அவரிடம் இருந்த 6 கருப்பு நிற

ரெக்சின் பேக்கை கைப்பற்றி சோதனை செய்ததில் அதில் கஞ்சா என்னும் போதைப்பொருள் இருந்தது. அதனை ஆய்வாளர் அத்தாட்சியில் கைது செய்தார்.அதில் நானும் கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம்.என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கபடும் அ.த.சா.ஆ ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். பின்னர் மாலை சுமார் 6 மணியளவில் மேற்படி எதிரி ஜான்சன் மற்றும் அவருடன் கைப்பற்றபட்ட கஞ்சா பொருளை தனுஷ்கோடி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளிடம் Q பிரிவு ஆய்வாளர் திரு.கென்னடி அவர்கள் ஒப்படைத்து மேல்நடவடிக்கைகாக புகார் மனு கொடுத்தார்.சுமார் 7 மணியளவில் காவல் ஆய்வாளர் ஜான்சன் என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்.அதில் சாட்சிகளாக நானும் ,முனியசாமியும் கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும் .அந்த எனது கையொப்பம் **அ.த.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யபடுகிறது. அதில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் முனியசாமியின் கையொப்பம் ஆகும்.கைப்பற்றபட்ட 6 கருப்பு கலர் ரெக்சின் ஒவ்வொரு பேக்கிலும் சுமார் தலா 50கிராம் மாதிரிக்காக 6 பேக்குகளில் இருந்து மொத்தம் 12 மாதிரிகள் எடுக்கபட்டு சீல் வைக்கபட்டது.மீதமுள்ள கஞ்சாவை அதே பேக்குகளில் தனித்தனியாக வைத்து சீல் வைத்தார்கள். இது சம்மந்தமாக தனுஷ்கோடி காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க விவரம் சொன்னேன்.

**<u>எதிரிகள் குறுக்குவிசாரணை</u>**

தகவல் எனக்கு வரும்போது நான் எங்கு இருந்தேன் என்றால் காலை 6 மணிக்கு எனது வீட்டில் ராமேஸ்வரத்தில் இருந்தேன். தனுஷ்கோடிக்கும் ராமேஸ்வரத்திற்கும் இடையே சுமார் எத்தனை கிலோமீட்டர் இருக்கும் என்றால் சுமார் 6 கிலோமீட்டர் இருக்கும்.14 கிலோ மீட்டர் என்றால் இருக்கலாம். எனக்கு எப்படி தகவல் வந்தது என்றால் தொலைபேசி வாயிலாக வந்தது. வீட்டிலிருந்து காவல்நிலையம் சென்றுவிட்டு சம்பவ இடம் சென்றேனா அல்லது நேரடியாக சம்பவ இடத்திற்கு சென்றேனா என்றால் முதலில் காவல் நிலையம் சென்றுவிட்டு பின்பு போலீசாருடம் சம்பவ இடம் சென்றோம்.நானும் தலையாரியும் போலீஸ் ஜீப்பில் சென்றோமா என்றால் இல்லை.எனது இருசக்கரவாகனத்தில் சென்றோம்.தலையாரியை நான்தான் போன் செய்து Q பிரிவு அலுவலகத்திற்கு வரசொன்னேன்.Q பிரிவு பிரிவில் போலீஸ்சார் என்னை சாட்சியாக இருக்க அழைத்தது தொடர்பாக நான் எனது மேல் அதிகாரிக்கு தகவல் தெரிவித்தேனா என்றால் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தேன்.ரைடு முடிந்து பிறகு எத்தனை மணிக்கு எனது அலுவலகம்

வந்தேன் என்றால் இரவு சுமார் 8 மணிக்கு வந்தேன்.இது சம்மந்தமாக டைரி எழுதினேனா இல்லை. Movement register எழுதினேனா என்றால் இல்லை. கரும்பலகையில் காலை 6-6.10 மணிக்கு எழுதிவிட்டு தான் Qபிரிவு அலுவலகம் சென்றேன் என்றால் சரிதான்.எனக்கு முன்பாக போலீசார் எனக்கு முன்பாக சம்பவ இடம் சென்றார்கள் நாங்கள் கூடவே ஜீப்பை பின்தொடர்ந்து சென்றோம்.Qபிரிவு ஆய்வாளர் தனக்கு கஞ்சா கடத்துவது தொடர்பாக தகவல் வந்துள்ளது என்றும் அதற்கு சாட்சியாக இருக்குமாறு என்னையும் தலையாரியையும் அழைத்தார். தனுஷ்கோடிக்கு VAO ,தலையாரி தனியாக உள்ளதா என்றால் சரியல்ல.ராமேஸ்வரம் VAO office தான் தனுஷ்கோடிக்கும் வரும். முதல் அத்தாட்சி எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் சம்பவ இடத்தில் நோட்டு வைத்து எழுதப்பட்டது.ரோட்டில் நின்றுகொண்டு எழுதினார்களா என்றால் சரிதான். அதை எழுதியது யார் என்றால் Qபிரிவு போலீசார் எழுதினார்கள். அவர் பெயர் ஞாபகம் இல்லை. Qபிரிவு ஆய்வாளருடன் 4 போலீசார்கள் வந்தார்கள். 6 பேக்கில் 25 பொட்டலங்கள் இருந்ததா அல்லது தலா 25 கிலோ இருந்ததா என்றால் தலா 25 கிலோ இருந்தது. எடை எப்படி போடபட்டது என்றால் ஞாபகம் இல்லை.சம்பவம் நடந்ததாக சொல்லபடும் இடத்தில் பேக்குகளில் விவர சிலீப் ஒட்டினாரா என்றால் ஒட்டவில்லை அதில் நானும் தலையாரியும் கையொப்பம் செய்யவில்லை.காலை 8 மணிக்கு கைப்பற்றுதல் முடிந்தது.நாங்கள் சம்பவ இடத்திலிருந்து தனுஷ்கோடி காவல் நிலையம் சென்றோம்.தனுஷ்கோடி காவல் நிலையம் எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் காலை 8.30 மணியவில் சென்றோம்.நாங்கள் தனுஷ்கோடி காவல் நிலையத்தில் 12 மணிநேரம் காத்திருந்தோமா என்றால் சரிதான்.தனுஷ்கோடி காவல் நிலையத்தில் எவ்வாறு கையெழுத்து போட்டோம் என்றால் சரிவர ஞாபகம் இல்லை.எத்தனை மாதிரிகள் எடுக்கபட்டது என்றால் 12 மாதிரிகள் எடுக்கபட்டது. மாதிரிகளில் என்ன சீல் வைக்கபட்டது என்றால் அது நியாபகம் இல்லை.மகஜரில் எதிரி கையெழுத்து செய்தாரா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் 2 எதிரிகள் ஓடிவிட்டார் என்று யார் கூறினார் என்றால் ஜான்சன் கூறினார். ஆய்வாளர் கென்னடியும் கூறினார்.நான் சொன்ன மாதிரி சொன்னபடி எதுவும் நடக்கவில்லை என்றால் சரிதான்.இந்த வழக்கு சம்மந்தமாக எனது உயர் அதிகாரிக்கு எழுத்துபூர்வமாக அறிக்கை அளித்தேனா என்றால் அளித்தேன். அதன் நகலை தனுஷ்கோடி ஆய்வாளரிடம் நான் ஒப்படைக்கவில்லை. என்னை ஆய்வாளர் விசாரணை செய்தபோது அறிக்கை அளித்தாக சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர்

என்னை விசாரணை செய்தபோது சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு நாங்கள் சென்றதாகவும் எதிரிகளை எத்தனை மணிக்கு பார்த்ததாகவும் எதிரியிடம் எத்தனை மணிக்கு கஞ்சா கைப்பற்றபட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.நான் உயர்அதிகாரிக்கு அறிக்கை அளித்தாக சொல்வது பொய் என்றும் வழக்கு தோதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் எனக்கு Q பிரிவு ஆய்வாளர் போன் செய்து வரசொன்னது பொய் என்றும் அதன் பேரில் நாங்கள் ரைடுக்கு சென்றதாக சொல்வது பொய் என்றும் அங்கு ஜான்சன் என்பவரிடம் கஞ்சா கைப்பற்றபட்டது பொய் என்றும் அதன் பேரில் ஆவணங்கள் தாயாரிக்கபட்டதாக சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. 1வது எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை

Taken down by me in open court
read over to the witness and
admitted by him to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkotti